IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.10

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.புகழ் |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | காவல் ஆய்வாளர் திமிரி, ராணிப்பேட்டை மாவட்டம் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.02.2026.

1ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு. மற்ற எதிரிகள் 2, 3, 5, 6, 7, 8, 9 எதிரிகள் ஆஜர்.

4ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு நான் காட்பாடி வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அந்த சமயம் எனது வட்டத்திற்கு உட்பட்ட திருவலம் காவல் நிலையத்தில் விசாரணையிலிருந்த குற்ற எண்.262/2016 இ.த.ச. 342, 364(A) என்ற வழக்கினை பரிசீலனை செய்து நான் எனது விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன். எனது விசாரணையிலும் இதற்கு முன்னர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையிலும் 25.05.2020 தேதி எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆஜர் எதிரி ராபின்சன் என்பவரை சேர்காடு திருவள்ளுர் பல்கலைக்கழகம் அருகில் கைது செய்து மேற்படி எதிரியை சாட்சிகள் திரு.Harish மற்றும் அரவிந்தன் ஆகியோர் முன்னிலையில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு

செய்தேன். பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் இருவரையும் விசாரணை செய்து தனி தனி வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் கடத்தப்பட்ட மகாலிங்கம் என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரியை அன்றே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் மற்ற எதிரிகளை கைது செய்ய வேண்டி கோப்பு விசாரணையில் இருந்த நிலையில் நான் பணியிட மாற்றம் சென்றதால் வழக்கு கோப்பை எனக்கு பின் வந்த காவல் ஆய்வாளரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

குறுக்கு விசாரணை-

ஆஜர் எதிரியை நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை புள்ளி விவர கணக்கிற்காக காவல் நிலையத்திற்கு வர வைத்து காவல் நிலையத்தில் ஆவணங்களை தயாரித்து பொய்யாக இவ்வழக்கில் எதிரியாக சித்தரித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 18.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.18 19:44:25 +0600

Additional District Judge(FTC),
Vellore